**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.48/2026</u>**

**<u>நாள் : 11.08.2026</u>**

**எ.ம.சா.** 1 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சீனிவாசன் | மாவட்டம் | : | வேலூர் |
| தந்தை பெயர் | : | திரு.சின்ன எல்லன் | வயது | : | 53 |
| ஊர் | : | பேர்ணாம்பட்டு | தொழில் | : | உதவி மேலாளர் |
| வட்டம் | : | பேர்ணாம்பட்டு | தேசியம் | : | இந்தியன் |

**<u>முதல் விசாரணை</u>**

கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்

1. TN 23 BT 4729 என்ற பதிவு எண் கொண்ட மேக்சி கேப் வேனின் தகுதி சான்றிதழ் நகல் – எ.ம.சா.ஆ.1

2. TN 23 BT 4729 என்ற பதிவு எண் கொண்ட மேக்சி கேப் வேனின் பர்மிட் நகல் – எ.ம.சா.ஆ.2

3. இறுதி அறிக்கை நகல் – எ.ம.சா.ஆ.3

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து சம்பந்தமாக நேரடியாக நான் எந்த விசாரணையும் நடத்தவில்லை. விபத்தில் இறந்த பூர்ணிமா மேக்சி கேப் வாகனத்தில் பயணம் செய்தார். இந்த வாகனம் விபத்தின் போது எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. காப்பீடு சரத்துக்கள் படி அதில் பயணம் செய்பவர்களுக்கு காப்பீடு வழங்க

வேண்டும் என்று உள்ளது என்றால் வாகனத்தில் குறிப்பிட்டுள்ள 12 பயணிகள் மற்றும் 1 ஓட்டுநருக்கு மட்டுமே காப்பீடு வழங்க முடியும். சம்பவத்தன்று பூர்ணிமா இருக்கையில் அமர்ந்து பயணம் செய்தவர் என்றால் இல்லை. இல்லை என்று விசாரணையில் தெரிய வந்ததா என்றால் விசாரணை ஏதும் செய்யவில்லை. மேக்சி கேப் ஓட்டுநர் மீது தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அவர் இறந்துவிட்டார் என்பதை பதிவு செய்து முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓட்டுநருடன் 4 நபர்கள் இறந்துவிட்டார்கள். இம்நீதிமன்றத்தில் ஒரு இறப்பு வழக்கும், மூன்று காய வழக்குகள் உள்ளது. இந்த விபத்தில் தாக்கல் செய்யப்பட்ட மற்ற மனுகள் தீர்ப்பாகிவுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் எங்கள் காப்பீட்டு நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் வரையறுக்கப்பட்ட பயணிகளை பொறுத்து எங்கள் நிறுவனம் நஷ்டஈடு வழங்கும். ஆம்பூர், வாணியம்பாடியில் இந்த விபத்தின் காயம்பட்டவர்களின் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. பூர்ணிமா வரையறுக்கப்பட்ட பயணிகளில் ஒருவர் என்றால் சரியல்ல. அதனால் 2 ஆம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.